# சமயநல்லூர் கிராமத்தின் மரபான நீராதார சூழல்கள்

# Tranditional Water Resources of Samayanallur Village

**ம. கண்ணன்**
முனைவர் பட்ட ஆய்வாளர்
நாட்டுப்புறவியல் மற்றும் பண்பாடு ஆய்வுகள் துறை, நிகழ்த்துக் கலைப்புலம்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை

**M. Kannan**
*Ph.D Scholar*
*Department of Folklore and Culture Studies*
*School of Performing Arts*
*Madurai Kamaraj University, Madurai*

## ஆய்வுச் சுருக்கம்

*தமிழகத்தில் நீர்மேலாண்மை என்பது விவசாயத்தை மையப்படுத்திய ஒன்றாகும். ஒவ்வொரு காலகட்டத்திலும் நீராதாரங்களை பயன்படுத்தும் முறைகளில் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. பண்பாட்டு வாழ்விலும் நீர் முக்கியப் பங்கு வகித்து வருகிறது. பண்டையத் தமிழர்கள் நீர் மேலாண்மைக்கான பல்வேறு செயல்பாடுகளை செய்திருந்தனர். அவற்றை கடைபிடித்து வேளாண்மை மற்றும் இதர பயன்பாடுகளுக்காக நீரினை உரிய வகையில் பயன்படுத்தும் வகையில் நீர் தேக்கங்களை உருவாக்கி வழிவழியாக பின்பற்றி வருகின்றனர். கண்மாய் அது சார்ந்த கால்வாய்களை சமயநல்லூர் பகுதியில் உள்ள மக்கள் உரிய வகையில் பயன்படுத்தி வேளாண்மையில் ஈடுபட்டு வருகின்றனர்.*

**முக்கியச் சொற்கள்:**
*மரபு, மரபுவழி நீர்மேலாண்மை, விவசாயம், நீர் நிலைகள்*

## Abstract

*Water management in Tamil Nadu is one that focuses on agriculture. There have been changes in the way water resources are used in each period.Water also plays an important role in cultural life. The ancient Tamil people implemented various functions for water management. They follow them and follow the path of creating water reservoirs in order to make proper use of water for agriculture and other uses. The people of Samayanallur area are making proper use of the canals associated with Kanmai and are engaged in agriculture.*

***Keywords:***
*Tradition, Traditional water Management, Agriculture, Water Bodies*

## Citation

**Kannan**, M. "Tranditional Water Resources of Samayanallur Village." *Journal of Tamil Culture and Literature*, vol. 1, no. 4, 2022, pp. 78–83.

**முன்னுரை**

*மனித வாழ்க்கைக்கு உணவு, உடை, இருப்பிடம் முக்கியமானவையாக இருப்பதைப் போன்று உயிர்வாழ்வதற்கு காற்று, நீர், உணவு ஆகியன இன்றியமையாதனவாகும். நீரின்றி அமையாதுலகு என்று பண்டைய இலக்கியங்கள் குறிப்பதற்குக் காரணமும் அதுதான். நீராதாரங்களைப் பயன்படுத்தி உற்பத்தியை அதிகப்படுத்த முடியும் என்பதைத் தொடக்க கால மனிதர்களின் வாழ்க்கை முறையில் வேட்டைச் சமூக நிலையிலிருந்து முன்னேறிய வேளாண்மைச் சமூகத்தில் காணலாம். மழை பெய்யும் போது அதனை உரிய முறையில் பயன்படுத்தும் வகையில் நீரோட்டப் பகுதிகளை கண்டறிந்து நீரைச் சேகரித்து விவசாயத்திற் குரியதாகப் பயன்படுத்தினர்.*

*தமிழர்கள் விவசாயத்திற்காக மேம்பட்ட நீர்மேலாண்மை முறைகளைக் கடைப்பிடித்தனர். சமூக மாற்றத்தின் விளைவால் அவை நிகழ்ந்தன என்றும் கூறலாம். இக்கட்டுரை கிராமங்களில் பின்பற்றப்படும் மரபான நீர்மேலாண்மை குறித்து விவரிப்பதாக அமைகிறது.*

**மரபு - விளக்கம்**

*மனித சமூகம் எதைக் கற்றதோ, எத்தகைய செயல்களை மேற்கொண்டதோ, எதில் பயிற்சி பெற்றதோ அந்த அனுபவங்களை எல்லாம் பதிவு செய்து மற்றொரு தலைமுறையினருக்கு கடத்தும் ஆவணக் காப்பகமாக விளங்குவதை மரபு என நாட்டுப்புறவியல் துறை சார்ந்து விளக்கம் தரப்படுகிறது. நாட்டுப்புறவியல் மரபுகள் வெகுமக்களிடையே காணப்படும் மரபுகளாகும். நாட்டுப்புற மக்களால் வளர்த்து எடுக்கப்படும் மரபுகளாகும். இம்மரபுகளே நாட்டுப்புற மக்களை வழி நடத்தி வருகின்றன. மேலும் மரபு என்பதை,*

***எப்பொருள் எச்சொல்லின் எவ்வாறு உயர்ந்தோர்***
***செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே (நூற்பா எண் : 387)***

*என்கிறது நன்னூல்.*

*‘‘அறிவுடையோர் எந்தப் பொருளை எந்தச் சொல்லால் எந்த முறைப்படி குறிப்பிட்டார்களோ அதே முறைப்படி வழங்குதல் மரபாகும்’’ என்பதே இதன் பொருள். சொல்லையும், பொருளையும் மட்டுமில்லாமல் அவர்கள் மேற்கொண்ட செயல்களையும் அவ்வாறே பின்பற்றுவதும் மரபே. ‘‘பண்பாட்டின் எல்லா நிலைகளிலும் மக்களால் பின்பற்றப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட நியதியே மரபு’’*(Tradition) *என்கிறது தமிழ் அகராதி. ஒரு காலத்தில் செய்யப்படுகின்ற செயல்களில் உண்மையும், நன்மையும் இருப்பின் அவை பின்வரும் தலைமுறையினரால் அப்படியே ஏற்றுக் கொள்ளப்பட்டு வழிவழியாகக் கடைப்பிடிக்கப் படுகின்றன. இவையே பின்னாளில் மரபாக நிலைத்துவிடுகின்றன. பழைமையைப் பேணுவதும் முன்னோர் வழியைப் பொன்னைப் போல் போற்றுவதும் மரபின் முக்கியக் கூறாகும். ஊர்தோறும் நாடுதோறும் மக்களினம் வாழும் இடந்தோறும் இம்மரபுகள் நீக்கமற நிறைந்துள்ளன.மரபு என்ற சொல் இன்று மரபியல், மரபினம், மரபுக் கூறு, மரபுக் கலை, மரபுத் தொடர், மரபு நோய், மரபணு என்று பல்வேறு துறைகளில் பயன்படுத்தப்பட்டு வருவதை அறிய முடியும். இதில் நாட்டுப் புறவியலில் மரபு என்பது மக்களின் சடங்குகள், நம்பிக்கைகள், வழிபாடுகள், பழக்க வழக்கங்கள் ஆகியவற்றால் பாதுகாக்கப்பட்டு வரும் மக்களின் பண்பாடாகவும், நாட்டுப்புற மக்களின் அறிதல் சார் அறிவாகவும் அடையாளப்படுத்தப்படுகிறது. அவ்வகையில் நீர் ஆதாரங்களைப் பயன்படுத்துவதற்காக செய்யும் மரபான செயல்பாடுகள், மரபுவழியான அறிவுமுறைகள் மரபுவழி நீர் மேலாண்மை என்று அழைக்கப்படுகிறது.*

**மரபுவழியான நீர் நிலைகளின் வகைகள் - விளக்கம்**

*தமிழர்கள் நீர்நிலைகளை பல பெயர்களில் குறிப்பிட்டுள்ளனர். சுனை, கயம், பொய்கை, ஊற்று என்பவை தானே நீர் கசிந்த நிலப்பகுதிகள் ஆகும். குட்டை என்பது மழை நீரின் சிறிய தேக்கமாகும். குளிப்பதற்குப் பயன்படும் நீர்நிலை குளம் என்றும், உண்பதற்குப் பயன்படும் நீர்நிலை ஊருணி என்றும், ஏர்த் தொழிலுக்குப் பயன்படும் நீர்நிலை ஏரி என்றும், வேறு வகையாலன்றி மழை நீரை மட்டும் ஏந்தி நிற்கும் நீர் நிலையினை ஏந்தல் என்றும், கண்ணாறுகளை உடையது கண்மாய் என்றும் பெயரிட்டு அழைத்துள்ளனர் என்று பண்பாட்டு அசைவுகள் என்ற நூலில் தொ. பரமசிவன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார். (தொ. பரமசிவன்: 2016: பக் -17). தமிழின் தொல் இலக்கியமான சங்க இலக்கியம், அக்கால மக்களின் பயன்பாட்டின் அடிப்படையில் நீர் நிலைகளை வகைப்படுத்தி பதிவு செய்துள்ளது.*

**சங்ககாலப் பாசனத் தொழில்நுட்பங்கள்**

*நமது தமிழகம் 2500 ஆண்டுகளாக ஏரி, குளம், குட்டை போன்ற நீர்நிலைக் கட்டுமானங்களைக் கட்டிப் பயன்படுத்தி வருகிறது. கற்சிறை, கலிங்கல், மோடு, கரை, கால்வாய், மதகு, தூம்பு, குளம், பொய்கை, தடாகம், ஏரி போன்ற சொற்கள் இலக்கியப் பயன்பாட்டில் இருந்துள்ளன.*

***"ஊர்க்கால் நிவந்த பொதும்பருள் நீர்க்கால்" (கலி. 56:1)***
***"வறுமை கூரிய மண்நீர் சிறு குளம்" - (அகம்: 121: 3)***
***"சிறு பல் கேணிப் பிடி அடி நசைஇ" (137: 2)***
***"நெடுவிளிக் கோவலர் கூவல் தோண்டிய" (அகம். 155:8)***

*போன்ற பாடல்வரிகள் நீர் தேக்கம் பற்றிய குறிப்புகளை உணர்த்துகிறது.*

*நீர் தேக்கத்தை போன்று நீர் சேமிப்பு முறை பற்றியும் இலக்கியக்குறிப்புகளில் உள்ளன. இக்குறிப்புகள் தற்கால நீர் தட்டுபாட்டிற்கு பயன்படும்.*

***"ஊர்உண் கேணி உண்தொக்க" (அகம். 399:1)***
***"வையை உடைந்த மடை அடைத்த கண்ணும்" (பரி. 6:82),***
***"நிலவு பயன்கொள்ளும் நெடுவெண் முற்றத்து" (நெடு. 95:97)***

*போன்ற பாடல் வரிகளில் நீர் நிலை சேமிப்புப்பற்றி குறிப்பிடுகிறது.*

***பொன் செய் கணிச்சித் திணி உடைத்து***
***சிரறுசில ஊறிய நீர்வாய் பத்தல் (பதிற். 22:12-14)***
***புன்புலம் வித்தும் வன்கை வினைஞர்***
***சீருடைப் பல்பகடு ஒலிப்பப் பூட்டி***
***நாஞ்சில் பூடிய கொழுவழி (பதிற்.58:15-18)***

*போன்ற பாடல்கள் நீர்ப்பாசன முறையை எடுத்தியம்புகின்றன*

**சமயநல்லூர் கிராமத்தில் உள்ள நீர் நிலைகள்**

*வைகையாற்றின் வடகரை பகுதியில் அமைந்துள்ள கிராமங்களின் கண்மாய்கள் ஒரு சங்கிலித்தொடர் போன்று காணப்படுகிறது. இப்பகுதியின் கண்மாய்களுக்கு வைகை ஆற்றிலிருந்து சோழவந்தான் அருகில் பிரியும் கால்வாய் மூலமாக தண்ணீர் கிடைக்கிறது. முதலில் தேனூர் கண்மாய் நிரம்பி மறுகால் சமயநல்லூர் கண்மாய்க்கு தண்ணீர் வருகிறது. சமயநல்லூர் கண்மாய் கொள்ளளவு எட்டியவுடன் மறுகால் பரவை கண்மாய்க்கு தண்ணீர் பாய்ந்தோடும். இதேபோன்று வைகையாற்றிலிருந்து தேனூரில் பிரிந்து கொடமுருட்டி பகுதி*

*வழியாக வரும் பிரதான தாழையடி கால்வாய் மூலம் சமயநல்லூரின் மேற்கு பகுதியில் உள்ள விவசாய நிலங்களுக்கு தண்ணீர் பாய்ந்தோடுகிறது. தாழையடி கால்வாயிலிருந்து ஏழு கிளை வாய்க்கால் பிரிந்து செல்கிறது. சமயநல்லூர் கிராமத்தின் நீர் ஆதாரங்களாக விவசாயத்திற்கு வடமேற்கு பகுதியில் பெரிய கண்மாய் மற்றும் சின்ன கண்மாய்கள் காணப்படுகின்றன. நிலத்தடி நீர் மட்டத்தை பாதுகாப்பதற்காக மூன்று ஊருணிகளும், மக்களின் குடிநீர் தேவைக்கு எட்டு கிணறுகளும் இருந்துள்ளன. தெற்கு பகுதியில் உள்ள மடையின் மூலமாக செல்லும் உபரி நீர் விவசாய பணிகளுக்கும், தற்பொழுது அமைந்துள்ள கிருஷ்ணன் கோவில் அருகில் உள்ள ஊரணிக்கும் கால்வாய் மூலம் நீர் செல்லும், அதன் தொடர்ச்சியாக வைகை நகர் பகுதியில் உள்ள ஊரணிக்கும் தண்ணீர் சென்று மக்கள் பயன்பாட்டிற்கும், விவசாயத்திற்கும் போதுமான அளவு நீர் கிடைக்கப்பெற்றுள்ளது.*

**கண்மாயில் உள்ள முக்கிய கூறுகள்**

*கண்மாய் மற்றும் நீர் நிலைகளில் முக்கிய கூறாக கரை, மடை, கலிங்கு, மதகு, குமிழி, தூம்பு ஆகியவை காணப்படுகின்றன. பெரும்பாலான குளங்களில் ஏழு அல்லது எட்டு அடி உயரத்தில் ஒருகல் தூண் காணப்படும். கல்தூண் சில இடங்களில் கூகூஎன்பதான வடிவத்திலும் காணப்படும். குளத்தில் தண்ணீரின் கொள்ளளவை கரண்டைக்கு(கணுக்கால்) தண்ணி, முட்டளவு (முழங்கால்) தண்ணி மற்றும் அரைக்கு (இடுப்பு) மேலே தண்ணி ஏறிடிச்சு என்ற முறையில் குறிப்பிடுகின்றனர். கிராமத்தில் குறிப்பிடும் கணுக்கால், முழங்கால், இடுப்பு என்பதெல்லாம் குளத்திலிருக்கும் கல்தூணில் காணப்படும் தண்ணீரின் அளவை குறிக்கிறது. கல்தூணில் உள்ள தண்ணீர் மட்டத்தின் அளவை வைத்தே குளத்தில் உள்ள தண்ணீரின் அளவை கணக்கிட்டு எத்தனை நாள் வயலுக்குத் தண்ணீர் பாய்ச்ச முடியும் என்பதைக் கணக்கிட்டு விடுவர். குளத்தின் நீர் அளவை அறிந்து கொள்ளும் நீர் அளவையாக* (water gauge) *இக்கல்தூண் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கிறது.*

*“தலைக்கு மேலே வெள்ளம் போன பின்னே சாண் போனா என்ன? முழம் போனா என்ன?” என்ற பழமொழியை நாம் பரவலாகப் பயன் படுத்துகிறோம். அதாவது அந்த கல்தூணின் மேல் தண்ணீர் வந்து விட்டால் அந்தக் குளம் தன் முழு கொள்ளளவை* (full tank level) *அடைந்து விட்டது என்று பொருள். அதற்கு மேல் குளத்திற்கு வரும் தண்ணீர் மறுகால் வழியே வெளியேறி விடும். இது போன்ற கண்மாய்ப் பாசன முறை சமயநல்லூர் கிராமத்தின் விவசாயம் செய்யும் பகுதிகளில் காணப்படுகின்றது.*

**அரசன்குளம் கண்மாய்**

*ஊரின் பெரியகண்மாயை அரசன்குளம் கண்மாய் என்று அழைக்கின்றனர். கண்மாயின் கரையில் பெரிய அரசமரம் இருந்ததனால் இப்பெயர் அமைந்ததாக கூறுகின்றனர். கண்மாயில் உள்ள மூன்று மடைகள் மூலம் வடகிழக்கு, கிழக்கு மற்றும் மேற்கு பகுதியில் உள்ள விவசாய நிலங்களுக்கு நீர் பாய்ச்சப்பட்டுள்ளது.*

**கிளை கால்வாய்கள்**

**வாரியன் ஓடை வாய்க்கால்**

*வாரியன் ஓடை வாய்க்கால் அளவில் 600 மீட்டர் அகலம் கொண்டது. வயல்களில் வேளாண்மைக்கு தண்ணீர் பாய்ச்சியது போக எவ்வளவு தண்ணீர் இருந்தாலும் முழுமையாக உள்வாங்கி கொள்வதால் வாரியன் ஓடை வாய்க்கால் என்ற பெயரால் அழைக்கப்படுகிறது.*

**வேம்படி வாய்க்கால்**

*இக்கால்வாயின் அருகில் வேப்பமரம் இருந்ததால் வேம்படி வாய்க்கால் என்று அழைக்கப்படுகிறது.*

**ஆண்டி செய் வாய்க்கால்**

*ஆண்டி என்பவரின் விளைநிலத்திற்கு அருகே இக்கால்வாய் உள்ளதால் ஆண்டி செய் வாய்க்கால் என்று கூறுகின்றனர்.*

**பொம்மன்செய் வாய்க்கால்**

**நாணகட்டை வாய்க்கால்**

**பறையன்தலை வாய்க்கால்**

*இவ்வாய்க்கால் பறையர் சமூகத்தைச் சேர்ந்தவர்களின் விவசாய நிலங்களுக்கு அருகில் உள்ளதால் இப்பெயரால் அழைக்கப்படுகிறது.*

**ஆலமரத்து வாய்க்கால்**

*பெரிய ஆலமரத்தின் அருகில் இக்கால்வாய் உள்ளத்தால் ஆலமரத்து வாய்க்கால் என்கின்றனர்.*

**மடைகள்**

*சமயநல்லூரில்உள்ள அரசங்குளம் கண்மாயில் மூன்று மடைகள் உள்ளன.*

1. *கவுல்மடை*
2. *சின்ன மடை*
3. *பெரிய மடை*

*மேற்கு பகுதியில் உள்ள ஒரு பகுதி விவசாய நிலங்களுக்கு கவுல் மடையின் மூலம் தண்ணீர் கிடைக்கிறது. கவுல் மடையில் இருந்து செல்லும் கால்வாய் மூலம் கிருஷ்ணன் கோவில் உள்ள ஊரணிக்கு கடந்த காலத்தில் தண்ணீர் சென்றுள்ளது. வடகிழக்கு பகுதியில் உள்ள விவசாய நிலங்களுக்கு முதலில் சின்ன மடையின் மூலமாக மட்டுமே தண்ணீர் பாய்ச்சு கின்றனர். ஏனெனில் பெரிய மடையின் மூலமாக தண்ணீர் பாய்ச்சினால் கண்மாயில் உள்ள தண்ணீர் விரைவாகவே வெளியேறிவிடும் நிலை உள்ளது. மடைகளை பாதுகாக்கும் பணியை மடையன் செய்கின்றார்.*

**கழிவு நீர்**

*தேனூர் பகுதி மற்றும் சமயநல்லூர் பகுதிகளில் உள்ள விவசாய நிலங்களில் பயன்படுத்திய தண்ணீர் போக மீதம் வருகின்ற நீரை பயன்படுத்தியும் விவசாயம் செய்துள்ளனர். இந்நீரை கழிவுநீர் என்று கூறுகின்றனர்.*

**எதுவனை**

*ஆற்றிலிருந்து தண்ணீர் பெற தாழையடி காலங்கரையை தூர்வாரிக்கொண்டு சென்று தண்ணீரை பயன்படுத்துகின்றனர். ஆற்றுக்கு எதிர் திசையில் இருந்து வந்து கால்வாயில் நீர்க் கொண்டு வருவதை எதுவனை என்று கூறுகின்றனர்.*

**முடிவுரை**

*சமயநல்லூர் கிராமத்தின் பகுதிகளில் நீர்மேலாண்மையை மரபான வழிகளில் பின்பற்றி வருகின்றனர். கண்மாய், கேணி, மடை போன்ற முறைகளில் நீர்ப்பாசன முறை காணப்படுகிறது. மரபான நீர்ப் பாசன முறையினை காலந்தோறும் பின்பற்றி வரும் சில கிராமங்களில் சமயநல்லூரும் ஒன்றாக அமைகிறது. பண்டைய பாசன முறைகளில் நீராதாரங்களை வேளாண்மைக்குப் பயன்படுத்தும் வகையில் தடுத்து தேக்கி வைக்கும் முறைகள் இருந்தன. சங்க காலத்திலிருந்து இத்தகைய நீரைத் தேக்கும் வழிமுறைகளைப் பற்றி அரசர்கள் அறிந்து அதன்படி வேளாண்மையைப் பெருக்கியிருக்கின்றமையைக் காணமுடிகிறது. அந்த அடிப்படையில் சமயநல்லூர் பகுதியல் பண்டைய பாசன முறைகளைப் பின்பற்றும் மரபான நடைமுறை காணப்படுகிறது. அரசன்குளம் கண்மாயிலிருந்து நீராதாரமானது சுற்றிலுமுள்ள விவசாய நிலங்களுக்குப் பயன்படும் வகையில் மடைகளும் கால்வாய்களும், எதுவனைகளும் கொண்டதாக அமைகிறது.*

**துணை நூற்பட்டியல்**


1. *தொ.பரமசிவன்,2016, பண்பாட்டு அசைவுகள், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில்,.*
2. *அ.ஆலிஸ், (உ.ஆ)., 2011, பதிற்றுப்பத்து மூலமும் உரையும், 2007, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், அம்பத்தூர், சென்னை.*
3. *கு.வெ.பாலசுப்பிரமணியன், (உ.ஆ)., 2011, புறநானூறு 1, 2, மூலமும் உரையும், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், அம்பத்தூர், சென்னை.*
4. *இரா.செயபால் (உ.ஆ)., 2007, அகநானூறு மூலமும் உரையும் 1, 2, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை.*
5. *வி.நாகராஜன், (உ.ஆ)., 2011, கலித்தொகை மூலமும் உரையும், நியூசெஞ்சுரி புக்ஹவுஸ் (பி) லிட், அம்பத்தூர், சென்னை.*


## References


1. *Paramasivan, T., Panpattu Asaivugal, Kalachuvadu Pathipagam, Nagercoil, 2016.*
2. *Aalis, A, Payitrupathu Moolamum Uraiyum, New Century Book House (Pvt.) Ltd., Ambathur, Chennai, 2011.*
3. *Balasubramanian, K.V., Purananooru 1,2, Moolamum Uraiyum, New Century Book House (Pvt.) Ltd., Ambathur, Chennai*
4. *Jeyapaul, R., Agananooru Moolamum Uraiyum 1,2, New Century Book House (Pvt.) Ltd., Ambathur, Chennai, 2007.*
5. *Nagarajan V., Kalithogai Moolamum Uraiyum, New Century Book House (Pvt.) Ltd., Ambathur, Chennai, 2011.*